**சார்பு நீதிமன்றம், திருவொற்றியூர்**

**S.C. No. 61 / 2022**

இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியின் வாக்குமூலம் 16.04.2025 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**Umesh Pandiyan (PW 3 )**

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

சம்பவ நடந்த இடத்திற்கு எதிரே என்.எஸ்.கே தெரு அமைந்துள்ளது. தெருவின் மறுபுறத்தில் மசூதி அமைந்துள்ளது. போலிசார் என்னை விசாரித்தபோது குறிப்பாக எந்தெந்த எதிரிகள் என்னை உடம்பில் எந்தெந்த இடத்தில் தாக்கினார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன். சம்பவத்திற்கு பிறகு காயமடைந்த எங்களை அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். முதலுதவி சிகிச்சைக்காக நாங்கள் மருத்துவர் டேவிட்மணி மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு எங்களுக்கு சிகிச்சை ஏதும் அளிக்கவில்லை. நான் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சுமார் 15 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். நான் 04.08.2021 அன்று மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு 07.08.2021 அன்று விடுவிக்கப்பட்டுள்ளேன் என்றும் இவ்வழக்கிற்காக நான் 15 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சைப் பெற்றதாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தன்று நானும் ஜெய்கணேஷ் என்பவரும் மது அருந்துவதற்காக சம்பவ இடம் சென்றோம் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தில் நாங்கள் மது அருந்திவிட்டு அங்கு அருகேயிருந்த பெண்களை கிண்டல் அடித்துக் கொண்டிருந்தோம் என்றும் அந்த சமயத்தில் எதிரிகள் அங்கு வந்து அதைக் குறித்து எங்களிடம் கேட்டனர் என்றும் அந்த சமயத்தில் நாங்கள் அவர்களிடம் தகராறு செய்தோம் என்றும் பின்பு அவர்களுக்கு எதிராக தவறான சங்கதிகளை குறிப்பிட்டு காவல் நிலையத்தில் புகார் அளித்தோம் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ சமயத்தில் நானும் எனது மாமா மகன் ஜெய்கணேஷ் அசா2 ஆகியோர் 4ஆம் எதிரி அன்புகண்ணன் மற்றும் அவரது மனைவி பூங்கொடி ஆகியோர்களை தாக்கியதால் பூங்கொடி என்பவர் எங்களுக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்றும்

அந்த புகாரின் பேரில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு எங்களுக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு திருவொற்றியூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கால அட்டவணை வழக்கு எண் 85/2022 கீழ் நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். பூங்கொடி என்பவர் தவறான சங்கதிகளை குறிப்பிட்டு எங்களுக்கு எதிராக பொய்யான புகார் அளித்துள்ளார். சம்பவ சமயத்தில் நானும் ஜெய்கணேஷ் என்பவரும் குடி போதையில் ஒருவரையொருவர் பீர்பாட்டிலைக் கொண்டு தாக்கிக் கொண்டோம் என்றும் அதனால் எங்களுக்கு காயங்கள் ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. நான் மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் ஒருமுறை என்னை விசாரித்தனர். அதன்பின்பு என்னை விசாரிக்கவில்லை. போலிசார் என்னை காவல் நிலையத்தில் விசாரிக்கவில்லை. நான் சொன்னவாறு எதிரிகளை எங்களை தாக்கியதால் எனக்கும் அசா2 க்கும் காயம் ஏற்படவில்லை என்றும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமிலலை என்றும் எதிரிகள் எங்களை தாக்கியதாக குறிப்பிட்டு இவ்வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Typed before me in the Open Court read over to the witness in Tamil and admitted by the witness to be correct.

S/d. S. Prabha Thomas
Subordinate Judge,
Thiruvottiyur.